செ.வெ.எண்.57 நாள்.27-11-2017

# செய்திக் குறிப்பு

-----------

தொழிற்பழகுநர் பயிற்சித்திட்டத்தை ஊக்குவிக்கும் முகமாகவும் இப்பயிற்சிகளை வழங்கும் வேலையளிப்போருக்கு நிதி மானியங்கள் வழங்கும் பொருட்டும் இந்திய அரசு தேசிய தொழிற்பழகுநர் ஊக்குவிப்பு திட்டம் **(National Apprenticeship Promotion Scheme - NAPS)** எனும் திட்டத்தை துவங்கியுள்ளது. இதன்படி தொழிற்பழகுநர் ஒருவருக்கு வழங்கப்படும் மாத உதவித்தொகையில் **25%** (அதிகபட்சம் ரூ.1500/-) இந்திய அரசால் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை வாயிலாக வழங்கப்படும். மேலும், முறைசார் பயிற்சி பெறாத புதுமுக தொழிற்பழகுநர்களுக்கான அடிப்படை பயிற்சி செலவிற்கும் நிதி உதவி செய்யப்படும். **40** நபர்களுக்கும் மேல் பணியாளர்களைக் கொண்ட தொழிற்சாலைகள், நிறுவனங்கள், கடைகள் மற்றும் வங்கிகள் போன்றவை இத்திட்டத்தின் கீழ் பயன் பெறலாம். இத்தகைய அமைப்புகளின் உரிமையாளர்கள் முதலில் **www.apprenticeship.gov.in** என்ற இணையதளத்தில் பதிவு செய்து கொள்ளுமாறும், தமது பணியாளர் எண்ணிக்கையில் 2.5% முதல் 10% வரை தொழிற்பழகுநர்களை நியமிக்குமாறும் அறிவுறுத்தப்படுகின்றனர். எனவே, 40 க்கும் மேல் பணியாளர்கள் எண்ணிக்கை கொண்ட நிறுவனங்களும் தொழிற்பழகுநர் பயிற்சி பெற விரும்பும் இளைஞர்களும் இத்திட்டத்தின் கீழ் பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இது குறித்த மேலதிக தகவல்களுக்கு https://ncvtmis.gov.in என்ற இணைய முகவரியினை அணுகலாம் எனவும் உதகமண்டல மாவட்ட ஆட்சியர் திருமதி இன்னசன்ட் திவ்யா,இ.ஆ.ப அவர்கள் தெரிவிக்கின்றார்.

மாவட்ட ஆட்சியர்
உதகமண்டலம்